8

# தமிழின் இனிமை

கனியிடை ஏறிய சுளையும் - முற்றல்
கழையிடை ஏறிய சாறும்,
பனிமலர் ஏறிய தேனும்,- காய்ச்சுப்
பாகிடை ஏறிய சுவையும்;
நனிபசு பொழியும் பாலும் -தென்னை
நல்கிய குளிரிள நீரும்,
இனியன என்பேன் எனினும், - தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்! (1)

பொழிலிடை வண்டின் ஒலியும், -ஓடைப்
புனலிடை வாய்க்கும் கலியும்,
குழலிடை வாய்க்கும் இசையும்,- வீணை
கொட்டிடும் அமுதப் பண்ணும்,
குழவிகள் மழலைப் பேச்சும்,- பெண்கள்
கொஞ்சிடும் இதழின் வாய்ப்பும்,
விழைகுவ னேனும், தமிழும்,-நானும்
மெய்யாய் உடலுயிர் கண்டீர்! (2)

பயிலுறும் அண்ணன் தம்பி, - அக்கம்
பக்கத் துறவின் முறையார்,
தயைமிக உடையாள் அன்னை,- என்னைச்
சந்ததம் மறவாத் தந்தை,
குயில்போற் பேசிடும் மனையாள்,-அன்பைக்
கொட்டி வளர்க்கும் பிள்ளை
அயல வராகும் வண்ணம் - தமிழ் என்
அறிவினில் உறைதல் கண்டீர். (3)

நீலச் சுடர்மணி வானம், - ஆங்கே
நிறையக் குளிர்வெண் ணிலவாம்,
காலைப் பரிதியின் உதயம், - ஆங்கே
கடல் மேல் எல்லாம் ஒளியாம்.
மாலைச் சுடரினில் மூழ்கும், - நல்ல
மலைகளின் இன்பக் காட்சி,
மேலென எழுதும் கவிஞர், - தமிழின்
விந்தையை எழுதத் தரமோ? (4)



இலவச விநியோகத்திற்காக

செந்நெல் மாற்றிய சோறும் - பசுநெய்
தேக்கிய கறியின் வகையும்.
தன்னிகர் தானியம் முதிரை, - கட்டித்
தயிரோடு மிளகின் சாறும்,
நன்மதுரஞ்செய் கிழங்கு - கானில்
நாவிலி னித்திடும் அப்பம்
உன்னை வளர்ப்பன தமிழா! - உயிரை
உணர்வை வளர்ப்பது தமிழே. (5)

- பாரதிதாசன் -
பாரதிதாசன் கவிதைகள்


இலவச விநியோகத்திற்காக